SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.


T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk



T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk


web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)


# மாதாந்த அறிக்கை

மாசி , 2015

## Social Organizations Networking for Development


RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.


இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

**"We all will Create a Better World"**

யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வ



## இயற்கை விவசாய பண்ணையின் மாசி மாதத்திற்கான செயற்பாடு.

பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்ட பயிர்கள் பராமிக்கப்படுவதோடு இம்மாதத்தில் மரவள்ளி ,பயறு, கௌப்பி, கீரை, கத்தரி, மிளகாய், பீற்றூட், பூசணி, பயிற்றை என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளன. மேலும் போடோ கரைசல்,காரக்கரைசல் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு தூவல் நீர்ப்பாசனத்திற்கான Pipeline செய்யப்பட்டுள்ளதுடன் நெல்,தக்காளி,வெண்டி என்பன அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.









**"We all will Create a Better World"**

## சேதன சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள 61 வாழைச்செய்கையாளர்களுக்கான சேதன சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ் வைபவத்தில் விவசாய அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களும் வடமாகாணசபை முதல்வர் C.V.K சிவஞானம், இங்கிலாந்து விரிவுரையாளர் டாக்டர் றிச்சட்,Sri Cert பணிப்பாளர் திரு.திலக் காரியவம்ச, அஜந்தாஜினி, சேதன விவசாயிகளும் SOND நிறுவன பணியாளர்களும் ஏனைய பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.







## MRE செயற்திட்டம்

இம்மாதம் MRE செயற்பாட்டில் MRE பணியாளர்களினால் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 5 வகையிலான 59 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 05 வெடிக்காத வெடி நிலையில் உள்ள வெடிபொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 09 தடவைகள் 60 வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு 131 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. அத்துடன் 09 தடவைகள் மிதிவெடி அபாயப் பகுதிக்கு சென்று பார்வையிட்டமைக்கமைவாக அங்குள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் 100 நபர்களினை தொடர்பு கொண்டு MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மற்றும் 36 தடவைகள் சமூக மட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக 407 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. மேலும் 2 தடவைகள் குழுக் கலந்துரையாடல்கள் மூலம் 24 நபர்களுக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டதுடன் 3 தடவைகள் தகவல் சேகரிக்கும் செயற்பாட்டினூடாக 36 பேர்களுக்கு MRE விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 698 பேருக்கு இம்முறை எமது MRE பணியாளர்களினால் MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.







SOND

## MRE செயற்திட்டம்

25.02.2015 அன்று சாவகச்சேரி சங்கத்தனை பகுதியில் இடம் பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பாக எமது MRE பணியாளர்கள் அங்கு சென்று பார்வையிட்டு தகவல் பெறுவதனையும் பாதிப்புத் தன்மையினையும் படத்தில் காணலாம்.







கோப்பாய் பகுதியில் UXO பாதிப்புக்குள்ளாகிய நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கோமளா என்பவரை எமது SOND அலுவலக MRE பணியாளர்கள் சென்று பார்வையிட்டதுடன் அவருக்கு வைத்தியசாலையில் உள்ள அத்தியாசியத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தேவைப்பாடான பொருட்கள் வாங்கிகையளிக்கப்பட்டது.







**"We all will Create a Better World"**

SOND

## பாடசாலை இடை விலகிய மாணவனை மீள பாடசாலையில் இணைத்தல்.

எமது SOND அலுவலக MRE பணியாளர்கள் இடைக்காடு அக்கரைப் பிரதேசத்தில் பாடசாலை இடை விலகிய மாணவன் வி.தனுசன் என்பவருடைய வீட்டுக்குச் சென்று வீட்டு நிலவரங்களை அவதானித்ததுடன் அம்மாணவனை அழைத்துச் சென்று யா/தொ.வீரகத்தி மகா வித்தியாலயத்தில் அதிபர் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி பாடசாலையில் இணைத்து விடப்பட்டதுடன் அவர்களுடைய வீட்டுச் சூழலை கருத்திற் கொண்டு உதவி பெற்றுக் கொடுக்கும் முகமாக இவர்களுடை.டய தகவல்கள் யாவும் கோப்பாய் பிரதேச சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டுள்ளது.







**“We all will Create a Better World”**

## தகவல் வளநிலையம்

இம்மாதம் எமது SOND அலுவலகத்திலுள்ள வள நிலையத்தில் நடமாடும் நூலகசேவைக்கேற்ப தமிழ் நாவல், கல்விசார்ந்த நூல்கள் , அறிவியல் சார்ந்த நூல்கள், பெரியார் சார்ந்த நூல்கள் , சிறுவர் சார்ந்த நூல்கள் என 05 தலைப்புக்களில் யாழ்/உடயரப்புலம் மிஷன் கலவன் பாடசாலையில் 20 புத்தகங்களும் யாழ்/ இளையதம்பி மகா வித்தியாலயத்தில் 5 புத்தகங்களும் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் 10 புத்தகங்களுமாக 35 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.



SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர் காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.**
**(Create a Conducive Society for Good Environment for the Future).**

மேற்படி திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதற்கு டயக்கோனியா நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு, ஆரையம்பதி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நெடுஞ்சாலை மரநடுகைத் திட்டமாகவும், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றம், இயற்கை வழி விவசாயம் மற்றும் விவசாய அமைப்புக்களைப் பலப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது கடந்த மாத அமர்வின் போது ஆலோசிக்கப்பட்டதன் படி பாசிக்குடா கடலில் சுற்றுலா விடுதி உரிமையாளர்களால் சேதமாக்கப்பட்டு வரும் முருகைக் கற்கள் மற்றும் கடற் கரையில் பொதுமக்கள் நடமாடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் மூவரடங்கிய ஓர் குழு நேரடியாகச் சென்று நிலமைகளை அவதானித்து ஓர் வீடியோ ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**“We all will Create a Better World”**

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 45 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 3 கலந்துரையாடலும்,3 திரைப்படக்காட்சியும் நடை பெற்றுள்ளது இதில் 46 ஆண், 15 பெண்கள் உட்பட 61 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

1. கழகத்தில் செயற்படும் சிறுவர்களால் நடமாடும் நூலகசேவை 2 நடாத்தப்பட்டுள்ளது. இதில் 100 புத்தகம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. புதிதாக 3 அங்கத்தவர்கள் இணைந்துள்ளார்கள்.
3. 5 கழக உறுப்பினர்கள் அலுவலகத்தில் காணப்படும் பாவனைக்குதவாத பேப்பர்களினால் 900 குழுசைப் பைகள் தயாரித்துள்ளார்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

01. 10 தடவை கிறிக்கட்வெட் சிறுவர்கள் விளையாடுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.





# 02. தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 8 தலைப்பில் 132 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

## பணியாளர் கலந்துரையாடல்

2015 ம் வருடத்திற்கான அலுவலக செயற்பாட்டுத் திட்டமிடல், அலுவலக நடைமுறை, எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலானது 2015.02.26,27 ம் திகதி அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் நிறைவேற்றுப்பணிப்பாளர் செந்துராசா அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, யாழ் அலுவலகப் பணியாளர்கள் 12 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.



## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**"We all will Create a Better World"**